**முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**
**முன்னிலை :- திரு. எஸ். விஜயகுமார், எம்.ஏ., எம்.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி, விழுப்புரம்**

**2022ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18ம் நாள் வெள்ளிக்கிழமை**

**அசல் வழக்குஎண்.123/2021**
**(CNR.No.TNVP02-000332-2021)**

பூபதி ... வாதி

/எதிர்/

1. நதியா
2. ராதா ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு 11.03.2021, 17.03.2021 ஆகிய தேதிகளில் தாக்கல் செய்யப்பட்டு 20.03.2021 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு 29.10.2021 தேதியில் இறுதியான விசாரணைக்காக என் முன்னர் வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.மு.காளிதாஸ் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளுக்கு அழைப்பானை சார்வாகியும் அவர்களை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் அவர்கள் ஒருதலைபட்ச படுத்தப்பட்டும், வாதி தரப்பு வாதத்தை கேட்டும் வழக்கு ஆவணங்களை பரிசீலினை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......

**தீர்ப்புரை**

வழக்கு சொத்தை பொருத்து வாதிக்கு விளம்புகை பரிகாரம் உத்தரவு செய்தும், வழக்கு சொத்திலுள்ள பிரதிவாதிகளிடமிருந்து சுவாதின மீட்டடைவு உத்தரவிட்டும் மற்றும் செலவுத் தொகைக்காக இவ்வழக்கு தாக்கல்.

2) **வழக்குரையின் சுருக்கம்:-**

வழக்கு சொத்து விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் வட்டம், அரகண்டநல்லூர் சார்பதிவகத்தை சேர்ந்த ஒதியத்தூர் கிராமத்தில் கிராம சர்வே எண்.74/6C ஆக இருந்து பின்னர் சர்வே எண்.74/6C1 ஆக கிடைத்து தற்போது நில உரிமை பட்டா எண்.992இன் படி புதிய சர்வே எண்.74/6C1A 0.30.94 ஏர்சில் வடக்கில் முருகன் கோயில் தெரு தெற்கில் சுப்பிரமணியன் இடம், கிழக்கில் ஏழுமலை இடம், மேற்கில் சக்திவேல் இடம், இதன் மத்தியில் கிழக்கு மேற்கு ஜாதியடி 49.1/2 அடி தெற்கு வடக்கு 44.1/2 அடிக்கு 2202.75 சதுரடிக்கு 204.71 சதுரமீட்டர் அளவுள்ள மனையும், மேற்படி மனையானது கட்டிடம் கட்டப்பட்டு ஆர்.சி.சி கட்டிடமான வீடு உள்ள இடமாகும் என்றும் மேற்படி மனையில் கி.மே.ஜாதியடி 14 தெ.வா 21 அடிக்கு 294 சதுரடியில் கட்டபட்டுள்ள ஆர்.சி.சி. மெத்தை வீடும், மேற்படி வீட்டில் உள்ள மின் இணைப்பு நெ.821ம் இதன் காப்புத் தொகை முழுவதும், கதவும் நெ.3/135ஏ உள்பட தங்களுக்கு கிரையம் செய்து கொடுத்து விட்டோம் என்றும் மார்கெட் மதிப்பு ரூபாய்.3,69,756/- என்றும் வழக்கு சொத்தானது கடந்த 10.05.1993ஆம் ஆண்டு முதல் பிரதிவாதியின் மாமனாரும் இரண்டாம் பிரதிவாதியின் கணவருமான ஒரு முத்துசாமி என்பவரால் கிரையம் பெறப்பட்டு அவரால் ஆண்டு அனுபவம் செய்து வரப்பட்ட சொத்தாகும் என்றும் மேற்படி வழக்கு சொத்தானது முத்துசாமி அவர்கள் அனுபவித்து வந்து, கடந்த 15.10.2016 அன்றைய தேதியில் முத்துசாமி இறந்துவிட்டார் என்றும் மேற்படி இறந்த முத்துசாமி என்பவருக்கு வாரிசுகளாக முத்துசாமி அவர்களின் மனைவி இந்த வழக்கின் இரண்டாவது பிரதிவாதியான ராதா, முத்துசாமி அவர்களின் மகளான, வெங்கடேசன் அவர்களின் மனைவி ஜோதி, முத்துசாமி அவர்களின் மகன் ஆதிமூலம்,

முத்துசாமி அவர்களின் தாயாரான பவுன்னம்பாள், கணவர் பெயர் சண்முகம் ஆகியோர் வாரிசுகள் ஆவர் என்றும் மேற்படி முத்துசாமி அவர்கள் இறப்புக்குப் பிறகு முத்துசாமி அவர்களின் வாரிசுகளான மேற்படி நபர்களிடம் வாரிசு என்ற அடிப்படையிலும் முத்துச்சாமி அவர்களின் சொத்துக்கு உரிமையாளர்கள் என்ற முறையில் வழக்கு சொத்தை வாதி தகுந்த கிரையத்திற்கு கடந்த 23.05.2018 அன்று அரகண்டநல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1182/2018 படி தகுந்த கிரையத்திற்கு முத்துசாமியின் வாரிசுகளிடம் கிரையம் பெற்று ஆண்டு அனுபவித்து வந்தார் என்றும் முத்துசாமி அவர்களின் இறப்பு சான்று மற்றும் முத்துசாமி அவர்களுக்கு இரண்டாம் பிரதிவாதி மற்றும் கிரையம் கொடுத்தவர்கள் வாரிசுகள் என்பதற்கு கண்டாச்சிபுரம் வட்டாச்சியரால் அளித்த வாரிசு சான்று ஆகியவை இவ்வழக்குரையுடன் தாக்கல் செய்யப்படுகிறது என்றும் இந்த வழக்குரையுடன் முத்துசாமி அவர்கள் பெற்ற அசல் கிரைய ஆவணம் முத்துசாமி அவர்களின் இறப்புக்கு பிறகு அவர்களது வாரிசுகள் வாதிக்கு வழக்கு சொத்தை கிரையம் கொடுத்து பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் அசல் ஆகியவை வழக்கின் ஆவணமாக தாக்கல் செய்யப்படுகிறது என்றும் வழக்கு வாதி வழக்கு சொத்தை தனது அனுபவத்தில் எடுத்து ஆண்டு அனுபவித்து வந்து வழக்கு சொத்தில் உள்ள வீட்டின் மின்சார இணைப்பு எண்ணின் பெயர் மாற்றத்திற்கு வேண்டி உதவி மின் பொறியாளர் இயக்குதலும் , பராமரித்தலும் தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் கண்டாச்சிபுரம் அவர்களுக்கு மனு அளித்து அதன் மூலமாக மின்சார இணைப்பின் பெயர் மாற்றம் வாதி பெயரில் செய்து மின்சார வாரியத்தால் அளிக்கப்பட்ட சான்று இந்த வழக்குரையுடன் வாதி தரப்பு ஆவணமாக தாக்கல் செய்யப்படுகிறது என்றும் வாதி வழக்கு சொத்தை தன்னுடைய அனுபவத்தில் எடுத்துக்கொண்டு வழக்கு சொத்தில் வாதி அனுபவத்திலிருந்து

வந்தார் என்றும் மேற்படி வழக்கு சொத்து உள்ள வீட்டிற்கு வீட்டு வரி ரசீது வாதியின் பெயரில் செலுத்தப்பட்டுள்ளது என்றும் வீட்டு வரி ரசீது மற்றும் வாதி செலுத்திய மின்சார கட்டண ரசீது ஆகியவை இந்த வழக்குரையுடன் வாதி தரப்பு ஆவணமாக தாக்கல் செய்யப்படுகிறது என்றும் வாதியால் கிரையம் பெறப்பட்டுள்ள சொத்துக்கு முன் உரிமையாளரான முத்துசாமி அவர்களின் மனைவியான வழக்கின் இரண்டாம் பிரதிவாதி இறந்த முத்துசாமி அவர்களின் மகள் ஜோதி, முத்துசாமி அவர்களின் மகன் ஆதிமூலம், தாயார் பவுனம்மாள் ஆகியோரிடமிருந்து வாதி கடந்த 2018ஆம் வருடம் மே மாதம் 23ஆம் தேதி வாதிக்கு சொந்தமான பிராது சொத்து விபரத்தில் கண்ட சொத்தை தகுந்த கிரையத்திற்கு பெற்று அனுபவித்து வந்தார் என்றும் ஆவண அடிப்படையில் வாதி சொத்தை கிரையம் பெறப்பட்ட தேதிமுதல் தனது அனுபவத்திற்கு எடுத்துக் கொண்டுள்ளார் என்றும் கிரையம் அளித்தவர்கள் மற்றும் இவ்வழக்கு பிரதிவாதிகளும் வாதிக்கு கிரையம் கொடுத்து முறையான delivery- வாதி பெற்று, சொத்தில் வாதி தனது அனுபவத்தில் இருந்து வந்து வழக்கு சொத்தை கிரையம் கொடுத்ததற்கு பிறகு சொத்து விபரத்தில் கண்ட சொத்தில் இருந்து பிரதிவாதிகளும் கிரையம் கொடுத்தவர்களும் வெளியேறினர் என்றும் பின்னிட காலத்தில் வெளியில் வசித்து வந்தனர் என்றும் மேற்படி காலத்தில் சொத்தை கிரையம் கொடுத்து வெளியேரியவர்கள் வேறு இடத்தில் இருந்துவிட்டு பிறகு வாடகைக்கு இருப்பதாக வாய் மொழியாக பிரதிவாதிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க வாதியும் அதற்கு ஒப்புக்கொண்டு பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் வாடகைக்கு இருந்து வந்தனர் என்றும் வாதிக்கு கிரையம் கொடுத்த இரண்டாம் பிரதிவாதியின் மகனும் முதலாவது பிரதிவாதியின் கணவருமாகிய ஆதிமூலம் என்பவர் வாதியிடம் வழக்கு சொத்தில் வாடகைக்கு இருந்து கொள்ள வேண்டி வாய்மொழியாக கேட்டு

கடந்த 2018-ம் ஆண்டு மார்ச் மாதம் 13-ம் தேதி வாதிக்கு ஒரு குறிப்பு வாடகைக்கு இருந்து கொள்ள எழுதிக் கொடுத்துள்ளார் என்றும் கிரையம் பெற்றது முதல் சொத்தை வாதி அனுபவத்தில் எடுத்துக்கொண்டு ஆண்டு வந்த நிலையில் முதலாம் பிரதிவாதியின் கணவரும் இரண்டாம் பிரதிவாதியின் மகனுமான ஆதிமூலம் என்பவர் வாடகைக்கு மேற்படி வீட்டில் இருந்து கொள்வதாக குறிப்பிட்டு வாடகை தொகையாக ரூபாய் இரண்டாயிரம் தருவதாக உறுதியளித்து அதன்படி வாடகையும் சில மாதங்களுக்கு அளித்து, பின்னிட்டு ஆதிமூலம் என்பவர் வீட்டில் இருந்து கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சென்றவர் வீடு திரும்பவில்லை என்றும் வழக்கு பிரதிவாதிகள் கடந்த ஓராண்டு காலமாக வாதி வீட்டிலேயே இருந்ததால் வாதி அரசாங்கத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு கொரானா காரணமாக பொது ஊரடங்கு அமலில் இருந்ததால் வாதியும் வீட்டை விட்டு வெளியே வரவில்லை என்றும் வாதி தானாகவே முன் வந்து நல்ல எண்ணத்தின் அடிப்படையில் கொரானா காலம் என்பதால் வாடகை வசூல் செய்யாமல் இருந்து வந்தார் என்றும் ஊரடங்கு தளர்வு செய்யப்பட்டவுடன் பிரதிவாதிகளிடம் வாதி வாடகை கேட்கும் போது வாடகை கொடுக்காமல் இருந்து வந்து ஆதிமூலம் என்பவர் எங்கேயோ சென்றுவிட்டார் என்றும் அவர் மீண்டும் வரப்போவதில்லை என்று தெறிவித்ததால் பிரதவாதிகளிடம் வாதி வீட்டிலிருந்து காலி செய்து கொள்ள சொல்லி பிரதிவாதிகளும் அதற்கு ஒப்புக்கொண்டு பின்னிட்டு வெளியேற மறுத்து வருகின்றார்கள் என்றும் பிரதிவாதிகள் வழக்கு சொத்திலிருந்து வெளியேறாமல் இருந்து வருவதால் சொத்தை அபகரித்துக் கொள்ள வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தின் அடிப்படையில் செயல்பட்டு வந்து பிரதிவாதிகள் கடந்த 05.01.2021 தேதியிட்டு வாதிக்கு, இரண்டாம் நிலை வாரிசுகள் மூலம் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பி அதன் மூலமாக

கிரையம் கொடுக்கப்பட்டது செல்லாது என்ற வாசகத்தை தெரிவித்து, உலகநாதன் தகப்பனார் பெயர் குப்பன் என்பவர் பெயரிலும், முருகன் தகப்பனார் பெயர் ஆதிமூலம், கவிதா தகப்பனார் பெயர் ஆதிமூலம் என்பவருக்கு முதலாம் பிரதிவாதி பாதுகாவலர்களாக இருந்து அறிவிப்பை கொடுத்துள்ளனர் என்றும் வாதிக்கு சொந்தமான சொத்தை அபகரித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக தப்பும் பொய்யும்மான அம்சங்களைக் கொண்ட விபர அடிப்படையில் அனுப்பி வைக்கப்பட்ட அறிவிப்பு எனவும் சொத்தை கிரையம் கொடுத்ததற்கு பிறகு ஆதிமூலம் தங்களை விட்டுப் பிரிந்து எங்கேயோ சென்று விட்டார் எனவும், ஆதிமூலம் தற்போது வரை எங்கு இருக்கிறார் என்று தெரியப்படுத்தாமல் ஆதிமூலம் தூண்டுதலின் பேரில் சட்டத்திற்குப் புறம்பான பலன்களை அடையலாம் என்ற கெட்ட எண்ணத்தின் அடிப்படையில் வீட்டை காலி செய்து கொடுக்காமல் அராஜகமான முறையில் வீட்டில் இருந்து வருவதாகவும் பொய் ஆவணம் ஏற்படுத்தி எமது கட்சிக்காரரின் சொத்தை அபகரித்து கொள்ளளாமென முயற்சிப்பதாகவும், ஏதேனும் ஆவணங்கள் ஏற்படுத்தினாலும் அது வாதியை கட்டுப்படுத்தாது எனவும் குறிப்பிட்டு கடந்த 20.01.2021 அன்று வாதி அனுப்பிய அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் வாதிக்கு வந்த வழக்கறிஞர் அறிவிப்பு வாதி பெற்றுக்கொண்ட அஞ்சலக ஒப்புகை அட்டை ஆகியவை இவ்வழக்கின் வாதி தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்யப்படுகிறது என்றும் பிரதிவாதிகளை நல்ல எண்ணத்தின் அடிப்படையில் வழக்கு சொத்தில் வாடகைக்கு இருக்க அனுமதித்ததை பிரதிவாதிகள் தவறாக பயன்படுத்தி வழக்கு சொத்தை அபகரிக்க எத்தனித்து வருகின்றனர் என்றும் மேற்படி பிரதிவாதிகளின் செயல்பாடுகள் வாதிக்கு இழப்பை ஏற்படுத்தும் நிலையில் உள்ளதால் வழக்கு சொத்திலிருந்து

பிரதிவாதிகளை வெளியேற்ற உத்தரவிட வேண்டி வாதி இவ்வழக்கை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டிய கட்டாய நிலையில் உள்ளார் என்றும் கூறி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில் பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சார்வாகியும், அவர்களை 17.08.2021 அன்று நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் அவர்கள் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்பட்டார்கள்.

4. வாதி தரப்பில் வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்து வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்துள்ளார். வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

## 5. தீர்வுக்கான பிரச்சனை

இவ்வழக்கில் வாதி கோரிய படி வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியமானது என விளம்புகை செய்தும் அந்த சொத்திலுள்ள பிரதிவாதிகளிடமிருந்து ' சுவாதீன மீட்டடைவு வழங்கியும் தீர்ப்பு செய்யத்தக்கதா அல்லது இல்லையா?____என்பதே இவ்வழக்கில் தீர்வு காண வேண்டிய பிரச்சனை ஆகும்.

## 6. தீர்வு :-

வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில வழக்கு சொத்து முத்துச்சாமி என்பவரால் கிரையம் பெற்று அனுபவித்து வந்த நிலையில் அவர் இறந்துவிட்டார் என்றும் வாதி முத்துச்சாமியின் வாரிசுகளிடமிருந்து 23.05.2018 அன்று மேற்படி சொத்தை கிரையம் பெற்றார்

என்றும் அந்த சொத்திலிருந்து கிரையம் பொறுத்து வெளியேறிய பிரதிவாதிகள் வாதியிடம் வாய்மொழி வாடகை அடிப்படையில் மேற்படி சொத்தில் வாடகைக்கு இருந்தனர் என்றும் அவர்கள் சில மாதம் வாடகை கொடுத்துவிட்டு வாதி மேற்படி சொத்திலிருந்து அவர்களை வெளியேற சொன்னதற்கு மறுத்துவிட்டார்கள் என்றும் மேற்படி சொத்து வாதிக்கு கிரையம் பாத்தியமானது என்றும் வாதி தன் வழக்கை சாட்சியங்கள் மூலம் மெய்ப்பித்துள்ளார் என்று கூறி தாவா படி தீர்ப்பாக உத்தரவிடுமாறு வேண்டி வாதிட்டார்.

7. வாதி தரப்பு வாதமும் வழக்கு ஆவணங்களும் கவனத்துடன் பரிசீலித்து கருத்தில் கொள்ளப்பட்டது.

8. வா.சா.1/ வாதி தாவா பிராது சங்கதிகளை அனுசரித்து சாட்சியம் அளித்துள்ளார்.

9. வா.சா.ஆ.1 கிரையப் பத்திரம் மூலம் 2ம் பிரதிவாதியின் கணவராகிய முத்துச்சாமி 10.05.1993 அன்று வழக்கு பழைய புல எண்ணில் கண்ட 5 செண்ட் இடத்தை கிரையம் பெற்றிருப்பது முதல் நிலை நோக்கில் புலனாகிறது.

10. வா.சா.ஆ.2 கிரய ஆவணம் மூலம் வாதி 23.05.2017 அன்று மேற்படி முத்துச்சாமியின் வாரிசுகளாகிய ராதா, ஜோதி, ஆதிமூலம், பவுனாம்பாள் ஆகியோர்களிடமிருந்து வழக்கு சொத்தை கிரையம் பெற்றிருப்பது முதல் நிலை நோக்கில் புலனாகிறது.

11. வா.சா.ஆ.3 வாரிசு சான்று மூலம் மேற்படி முத்துச்சாமிக்கு மேற்படி ராதா, ஜோதி, ஆதிமூலம், பவுனாம்பாள் ஆகியோர் வாரிசுகளாக இருப்பது முதல் நிலை நோக்கில் புலனாகிறது.

12. வா.சா.ஆ.4 இறப்பு சான்று மூலம் மேற்படி முத்துசாமி 15.10.2016 அன்று இறந்திருப்பது முதல் நிலை நோக்கில் புலனாகிறது.

13. வா.சா.ஆ.5 நோட்டீஸ் மூலம் உலகநாதன், முருகன், கவிதா, நதியா ஆகியோர் தங்கள் வழக்கறிஞர் மூலம் வாதிக்கு அறிவிப்பு கொடுத்து தங்களது சொத்து அனுபவத்தை வாதி இடையூறு செய்கிறார் என்று கூறியிருப்பது முதல் நிலை நோக்கில் புலனாகிறது.

14. வா.சா.ஆ.6 அறிவிப்பு மூலம் வாதி தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு கொடுத்து வழக்கு சொத்தில் உள்ள வீட்டில் இருந்து காலி செய்யுமாறு கூறியிருப்பது முதல் நிலை நோக்கில் புலனாகிறது.

15. வா.சா.ஆ.7 வரிசை ஒப்புகை அட்டைகள் மூலம் பிரதிவாதிகள் மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டிருப்பது முதல் நிலை நோக்கில் புலனாகிறது.

16. வா.சா.ஆ.8 வீட்டு வரி ரசீது மூலம் வாதி கடந்த 2020-2021 ஆண்டுக்குறிய வீட்டு வரியை வழக்கு சொத்தில் உள்ள வீட்டுக்கு செலுத்தியிருப்பது முதல் நிலை நோக்கில் புலனாகிறது.

17. வா.சா.ஆ.9 மின் இணைப்பு பெயர் மாற்று சான்று மூலம் வாதி தனது பெயருக்கு வழக்கு சொத்தில் உள்ள வீட்டு மின் இணைப்புக்கு 03.02.2021 அன்று பெயர் மாற்றம் பெற்றிருப்பது முதல் நிலை நோக்கில் புலனாகிறது.

18. வா.சா.ஆ.10 மின்சார கட்டணம் ரசீது மூலம் மேற்படி மின் இணைப்புக்கு வாதி தன் பேரில் 03.02.2021 அன்று மின்சார கட்டணம் செலுத்தியிருப்பது முதல் நிலை நோக்கில் புலனாகிறது.

19. பிரதிவாதிகள் வா.சா.1 சாட்சியத்தையும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 சான்றாவணங்களையும் குறுக்கு விசாரணை செய்து மறுக்கவில்லை. மேற்படி சாட்சியங்களின் மூலம் வாதி தாவா சொத்தை கிரைய முன் பாத்தியஸ்தர் ஆகிய முத்துச்சாமி என்பவருக்கு பாத்தியப்பட்டு இருந்ததையும் அவர் இறப்பிற்கு பிறகு அந்த சொத்தை அவரது வாரிசுகளிடமிருந்து வாதி கிரையம் பெற்றிருப்பதையும் அந்த சொத்தை தன் பெயரில் வீட்டு வரி மற்றும் மின் இணைப்பு பெற்று அனுபவித்து இருப்பதையும் மெய்ப்பித்துள்ளார். அதனால் வாதி வழக்கு சொத்தில் தனக்குள்ள உரிமை மற்றும் பாத்தியத்தை சாட்சியங்கள் மூலம் பிரதிவாதிகளுக்கு எதிராக மெய்ப்பித்திருப்பது புலனாகிறது.

20. மேலே கண்ட காரணங்களினால் வாதி தரப்பு வாதம் ஏற்கப்பட்டு இவ்வழக்கில் வாதி கோரிய படி வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியமானது என விளம்புகை செய்தும் அந்த சொத்திலுள்ள பிரதிவாதிகளிடமிருந்து சுவாதின மீட்டடைவு உத்தரவு செய்தும் தாவா தீர்ப்பு செய்யத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இறுதியாக, இவ்வழக்கில் வாதி கோரிய படி வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியமானது என விளம்புகை செய்தும் வழக்கு சொத்திலுள்ள பிரதிவாதிகளிடமிருந்து வாதி சுவாதீன மீட்டடைவு பெறும் வகையில் உத்தரவு செய்தும் தாவா பிரதிவாதிகளுக்கு எதிராக செலவுத் தொகையுடன் தீர்ப்பு செய்யப்படுகிறது. பிரதிவாதிகள் வாதியிடம் வழக்கு சொத்தை ஒப்படைக்க கால அவகாசம் இரண்டு மாதங்கள்.

இந்த தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் 18.02.2022 வெள்ளிக்கிழமை ஆகிய இன்று பகரப்பட்டது.

/ஒப்பம்/எஸ்.விஜயகுமார்,
முதன்மை சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

**இணைப்பு**

**வாதி தரப்பு சாட்சிகள்**

வா.சா.1. திரு.பூபதி (வாதி)

**வாதி தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ1 | 10.05.1993 | 2ம் பிரதிவாதியின் கணவர் முத்துச்சாமி கிரயம்பெற்ற ஆவணம் (அசல்) (ஆவண எண்.1729/93 அரகண்டநல்லூர் சார்பதிவாளர் அலுவலகம்) |
| வா.சா.ஆ.2 | 23.05.2018 | முத்துசாமியின் வாரிசுகள் வாதிக்கு ஏற்படுத்திக்கொடுத்த கிரய ஆவணம் (அசல்) (ஆவண எண்.1182/2018 அரகண்டநல்லூர் சார்பதிவாளர் அலுவலகம்) |
| வா.சா.ஆ.3 | 03.12.2016 | கண்டாச்சிபுரம் வட்டாட்சியர் அளித்த 'வாரிசு சான்றிதழ் (நகல்) |
| வா.சா.ஆ.4 | 17.10.2016 | முத்துசாமியின் இறப்பு சான்றிதழ் (நகல்) |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.5 வரிசை | 05.01.2021 | உலகநாதன், முருகன், கவிதா, நதியா ஆகியோர் வழக்கறிஞர் மூலம் வாதிக்கு அனுப்பிய அறிவிப்புகள் (அசல்)(2 எண்ணம்) |
| வா.சா.ஆ.6 | 20.01.2021 | வாதி தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பு (அலுவலக நகல்) |
| வா.சா.ஆ.7 வரிசை | 29.01.2021 | பிரதிவாதிகள் நோட்டிசை பெற்றுக்கொண்டதற்கான அசல் அஞ்சல் ஒப்புகை அட்டைகள் (2 எண்ணம்) |
| வா.சா.ஆ.8 | 29.01.2021 | 2020-2021ம் ஆண்டுக்கு வாதி வழக்கு சொத்தில் உள்ள வீட்டிற்கு கட்டிய வீட்டு வரி ரசீது (அசல்) |
| வா.சா.ஆ.9 | 03.02.2021 | கண்டாச்சிபுரம் தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் வாதிக்கு அளித்த மின் இணைப்பு பெயர் மாற்று உத்தரவு (அசல்) |
| வா.சா.ஆ.10 | 03.02.2021 | வழக்கு சொத்தில் உள்ள வீட்டிற்கு வாதி கட்டிய மின்சார கட்டணம் ரசீது (அசல்) |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்**

(இல்லை)

/ஒப்பம்/எஸ்.விஜயகுமார்,
முதன்மை சார்பு நீதிபதி,
விழுப்புரம்.